பேரூராட்சிகளின் ஆணையரகம்
சென்னை–28

ந.க.எண்.2410/2022/இ5

நாள்.01.09.2022

**சுற்றறிக்கை**

பொருள் - சொத்துவரி – பேரூராட்சிகள் ஆணையரகம் – அனுமதியற்ற கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிப்பு செய்வது – அறிவுரை வழங்குதல் தொடர்பாக.

---

அனைத்து பேரூராட்சிகளில் உள்ள அனுமதியற்ற கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிப்பு செய்வது தொடர்பாக பின்வரும் அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920–ன் பிரிவு 82–ன்படி பேரூராட்சிகளின் எல்லைக்குட்பட்ட அனைத்து கட்டிடங்களுக்கும், மனைகளுக்கும் (விலக்களிக்கப்பட்டதை தவிர்த்து) சொத்துவரி விதிப்பு செய்ய வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் கட்டிட விதிகளுக்கு முரணாக அல்லது அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்களுக்கும் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு சொத்துவரி விதிப்பு செய்யலாம் என அரசாணை நிலை எண்.161. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை, நாள். 14.11.2000–ல் தெளிவுரை வழங்கி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அதன் நகல் இணைக்கப்பட்டுள்ளது)

**நிபந்தனைகள்**

1. **கட்டிட விதிகளுக்கு முரணாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளதை குறித்து எடுக்கப்படும் நடவடிக்கையின் முடிவை பொருத்து, கட்டிடத்தில் மாறுதல் செய்யப்படும் அல்லது இடிக்கப்படும் நேர்வுகளில், எடுக்கப்படும் நடவடிக்கைக்கு பின்னர், தேவைப்படின் வரிவிதிப்பை குறைக்கவோ, அல்லது வரிவிதிப்பை ரத்து செய்யவோ நடவடிக்கை எடுக்கப்படும்.**
2. **இந்த வரிவிதிப்பு கட்டிட விதிகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கையையும் கட்டுப்படுத்தாது.**

ஆனால் சில பேரூராட்சிகளில் இவ்வாறான கட்டிடங்களுக்கு உரிய முறையில் சொத்துவரி விதிக்காமல் உள்ளாட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்துவதாக தெரிய வந்துள்ளது.

எனவே, மேற்காணும் அரசாணை மற்றும் சட்ட விதிகளின் அடிப்படையில் பேரூராட்சிகளிலுள்ள அனைத்து கட்டிடங்களுக்கும் சொத்து வரிவிதிக்கும் நடைமுறையினை செயல்படுத்த தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஒம்/–இரா.செல்வராஜ்
ஆணையர்

பெறுநர்
அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்(உரிய வழிமுறையாக)
அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கு தகவல் தெரிவிக்கும் பொருட்டு.

நகல்
1. ஏ பிரிவு கண்காணிப்பாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம், சென்னை–28
2. உதவி திட்ட ஆராய்வாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம், சென்னை–28

// உத்திரவுப்படி //

01/09/22

ஆணையருக்காக

1/9/2022

2.3 சொத்துவரி விதிப்பு – கட்டிட விதிகளுக்கு முரணாக கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிப்பதற்கு தெளிவுரை வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நநி4) துறை

அரசாணை (நிலை) எண்.161 நாள் : 14.11.2000

படிக்க :

நகராட்சி நிர்வாக ஆணையரின் கடித ந.க.எண்.64580/99/ஆர்1, நாள் 22.9.99

**ஆணை:**

1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் அடிப்படையில் கட்டிட விதிகளுக்கு முரணாகக் கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிப்பதற்கு வகுக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை மலைப்பிரதேசங்களில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுக்கும் பின்பற்றுவது குறித்து நகராட்சி நிர்வாக ஆணையாளர் அரசிற்கு அனுப்பியிருந்த பரிந்துரைகள் அரசால் விரிவாகப் பரிசீலிக்கப்பட்டது.

2. நடைமுறையில் உள்ள சட்டக் கூறுகளின்படி, நகராட்சி நிர்வாக ஆணையரின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, உள்ளாட்சித் துறையின் 2.8.1948 ஆம் நாள் அரசாணை (நிலை) எண்.381ல் வெளியிடப்பட்டுள்ள நெறிமுறைகளுக்கிணங்க. 1920 ஆம் ஆண்டைய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பிரிவு, 82ன் கீழ் மலைப்பிரதேசங்கள் உட்பட நகராட்சி எல்லைக்குள் அமைந்திருக்கும் அனைத்து கட்டிடங்களுக்கும். அவற்றின் வேறு கட்டிட விதிகள் பாதிப்புகளைக் கருத்தில் கொள்ளாமல், கீழ்கண்ட இரண்டு நிபந்தனைகளை குறிப்பிட்டு சொத்து வரிவிதிக்கப்படலாம் என அரசு இவண் தெளிவுரை வழங்குகிறது:

(i) கட்டிட விதிகளுக்கு முரணாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது குறித்து எடுக்கப்படும் நடவடிக்கை முடிவைப் பொருத்து, கட்டிடத்தில் மாறுதல் செய்யப்படும் அல்லது இடிக்கப்படும் நேர்வுகளில், எடுக்கப்படும் நடவடிக்கைக்குப் பின்னர், தேவைப்படின் வரிவிதிப்பை குறைக்கவோ அல்லது வரிவிதிப்பை ரத்து செய்யவோ நடவடிக்கை எடுக்கப்படும்.

(ii) இந்த வரி விதிப்பு கட்டிட விதிகள் தொடர்பாக மேற் கொள்ளப்படும் எந்த ஒரு நடவடிக்கையும், கட்டுப்படுத்தாது.

3. இதனை அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அறிவுறுத்துமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் பேரூராட்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. மகாராஜன்,**
அரசு செயலாளர் (பொறுப்பு)